ஜூன் 9

மனன வசனம்

**சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமான வைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள். வெளி 15:3.**

ஆராய்ச்சிக்கு

*ஆதி 17:9-11; யாத் 31:13,17; வெளி 13:17; எபே 1:13,14; எபி 4:9,10.*

ஜூன் 9 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

பாடம் 11

# தேவ முத்திரையா? மிருகத்தின் முத்திரையா?



மோசே - ஆட்டுக்குட்டியானவருடைய பாடலின் ஆரம்பவரிகள்தாம் இன்றைய மனன வசனங்கள். ‘மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் எதிர்த்து நின்று ஜெயங்கொண்டவர்கள்’ இந்தப் பாடலைப் பாடினார்கள். வெளி 15:3. அவர்களில் ஒருவராக நாமும் இருக்க என்ன செய்யலாம்?

மிருகத்தின் முத்திரைக்கு எதிராக எச்சரிக்கிற மூன்றாம் தூதனுடைய தூதை அறிவிப்பது என்பது கடைசிக்கால தேவனுடைய மக்களின் முக்கியமான அடையாளங்களில் ஒன்றாகும். வேதாகமம் முழுவதிலும் இந்த முத்திரையைப்பற்றி வேறு எங்கும் அதிகம் எச்சரிக்கப்படவில்லை; எனவே இந்த முத்திரை என்னவாக இருக்குமென பல குழப்பமான முடிவுகளுக்கு காலம்காலமாக மக்கள் வந்திருக்கிறார்கள்: நெற்றியில் போடப்படும் பட்டிக் குறியீடு, ஒரு கடன் அட்டை எண், ஏதாவது பயோமெட்ரிக் அடையாளம் என பலவிதக் கருத்துகள் நிலவுகின்றன.

பாபிலோனில் குழப்பமான கருத்துகள் பெருகியிருப்பது குறித்து ஆச்சரியப்படக்கூடாது. பாபிலோன் என்றாலே ‘குழப்பம்’ என்றுதான் அர்த்தம். ஆனால் தேவனுடைய மக்கள் இந்த விஷயம் குறித்து தெளிந்த அறிவுரையவர்களாக இருக்கவேண்டும்; அப்போதுதான் மூன்றாம் தூதனுடைய செய்தியை வல்லமையோடு அறிவிக்கமுடியும். மிருகத்தின் முத்திரை என்னவென்றும், தேவனுடைய முத்திரையைப் பெற்றுக்கொண்டு அதிலிருந்து எவ்வாறு தப்பலாமென்றும் இந்த வாரம் பார்ப்போம்.

2018, ஜூன் 16 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

**ஞாயிறு, ஜூன் 10**

## தேவபிள்ளைகளின் அடையாளம்

**பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவபிள்ளைகளை வெளிப்படையாக அடையாளங்காட்டுகிற அடையாளங்கள் இரண்டு இருந்தன. ஒன்று விருத்தசேதனம். இந்த அடையாளம் முதலில் யாருக்குக் கொடுக்கப்பட்டது? ஆதி 17:9–11.**

இரட்சிப்பு உடன்படிக்கையின் அடையாளமாக ஆபிரகாமும் அவருடைய சந்ததியாரும் விருத்தசேதனம் பண்ணவேண்டுமென்று தேவன் கட்டளையிட்டார். ஆண்குழந்தைகள் பிறந்து எட்டாம் நாளில் விருத்தசேதனம் பண்ண வேண்டும். லேவி 12:3. இது ஒரு சடங்காக இருந்தாலும், ஆழமான அர்த்தமுடையதாயிருந்தது. இருதய 'விருத்தசேதனத்தை' அது சுட்டிக்காட்டியது. உபா 30:6. அதனால்தான் பவுல், 'புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்' என்கிறார். ரோமர் 2:28,29.

புதிய ஏற்பாட்டில், விருத்தசேதனம்போய் ஞானஸ்நானம் வந்ததை 1கொரி 7:19; கலா 5:6; 6:15 குறிப்பிடுகின்றன. பாவத்திற்கு மரித்து, புதிய ஜீவனுள்ளவர்களாக உயிர்த்தெழுகிற 'புது சிருஷ்டிப்பின்' அனுபவத்தை ஞானஸ்நானம் சுட்டிக்காட்டுகிறது. ரோமர் 6:3,4. அதனால்தான் விருத்தசேதனம் ஒன்றுமில்லை என்றும், 'அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசமும்,' 'தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதுமே' உண்மையில் முக்கியம் என்கிறார்.

**தம்முடைய பிள்ளைகளைச் சுட்டிக்காட்ட தேவன் வெளிப்படையாகக் கொடுத்திருக்கும் இரண்டாவது அடையாளம் என்ன? அது ஏன் கொடுக்கப்பட்டது? யாத் 31:13,17; எசே 20:12,20.**

ஓய்வுநாள். இது சிருஷ்டிப்பிலேயே கொடுக்கப்பட்டது. ஆதி 2:2,3. ஆனால் விருத்தசேதனம் ஆபிரகாமிடமிருந்துதான் ஆரம்பித்தது. அதனால்தான் ஆதியாகமத்தைச் சுட்டிக்காட்டி, 'ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது' என்று இயேசு சொன்னார். மாற்கு 2:27. சிருஷ்டிப்பின்மூலம் நாம் தேவனுக்கே சொந்தமானவர்கள் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. ஏனெனில், அவர் நம்மை உண்டாக்கி, மீட்டிருக்கிறார்; நம்மை நீதிமான்களாக்கி, பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். விருத்தசேதனம்பண்ணுதல் இனி முக்கியமல்லவென்று பவுல் சொன்னாலும், ஓய்வுநாள் உட்பட தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வது இன்றும் முக்கியமானது என்று அவர் கூறுகிறார். எபி 4:9.

இருதயத்தில் மெய்யாகவே நீங்கள் விருத்தசேதனம் பெற்றுள்ளீர்களா? உங்களுடைய எண்ணங்களும் நோக்கங்களும் அதுபற்றி என்ன கூறுகின்றன?

## மிருகமும் பொய்த்தொழுகையும்

'மிருகத்தின் முத்திரையை' நாம் பெறக்கூடாதென வெளி 13:17; 14:9,10; 16:2 எவ்வாறு வலியுறுத்துகின்றன?

மிருகத்தின் முத்திரையைப் பெறுகிறவர்கள் கலப்பில்லாமல் வார்க்கப் பட்ட தேவ கோபத்திற்கு ஆளாவார்கள், கடைசி ஏழு வாதைகளால் தண்டிக்கப் படுவார்கள், அக்கினிக் கடலில் தள்ளப்படுவார்கள். ஆனால், மிருகத்தின் முத்திரையைத் தரிக்க மறுப்பவர்கள்பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது; ஜெயங்கொண்டவர்களாக, தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரப்பாடலைப் பாடியவாறு கண்ணாடிக் கடலண்டையில் நிற்பார்கள்.

ஒருவர்கூட பெறக்கூடாத இந்த முத்திரை என்ன? பொய்தொழுகைதான் இந்த முத்திரை என்று மேலுள்ள வசனங்கள் தெளிவாகக் கூறுகின்றன. மேலும், தானி 7இல் சொல்லப்படும் நான்காம் மிருக வல்லமையானது தன் ஆளுகையின் பிற்பகுதியில் 'காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்' என்று ஏற்கனவே பார்த்தோம். தானி 7:25. இந்த வல்லமைதான் சமுத்திரமிருகமாக வெளி 13 சொல்கிறது. இந்த வல்லமை மாற்ற நினைத்த பிரமாணம் நான்காம் கற்பனையாகிய ஓய்வுநாளாகும். பத்துக் கற்பனைகளில் ஓய்வுநாள்தான் காலத்தைப்பற்றியது; அது தேவனை 'வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தை யும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினவராக' சுட்டிக்காட்டு கிறது. யாத் 20:11.

இந்த மிருக வல்லமை மாற்ற நினைத்த நான்காம் கற்பனையைத்தான் முதலாம் தூது சுட்டிக்காட்டுகிறது; தேவனைமட்டுமே சிருஷ்டிகராகத் தொழும்படி அந்தத் தூதன் கூறுகிறான். வெளி 12-14 அதிகாரங்களில் தொழுகை சம்பந்தமாக ஏழு வசனங்கள் உள்ளன; ஆனால் வெளி 14:7 மட்டும்தான் மெய் யான தொழுகையைச் சுட்டிக்காட்டுகிறது: மற்ற ஆறு வசனங்களும் மிருகத்தை யும் அதன் சொரூபத்தையும் தொழுவது பொய்த்தொழுகையென எச்சரிக்கின் றன. வெளி 13:4,8,12,15; 14:9,11. பொய்த்தொழுகை செய்கிறவர்களின் நிலை என்னவாகுமென மூன்றாம் தூதன் சொல்லிவிட்டு, மெய்த்தொழுகைக்காரர் கள்பற்றி இப்படிக் கூறுகிறான்: 'தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான் களுடைய பொறுமை இதிலே விளங்கும்.' வெளி 14:12.

அதாவது, மூன்று தூதர்களும் அறிவித்த செய்திகள் மக்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் காட்டுகின்றன. ஒன்று, ஏழாம்நாள் ஓய்வுநாள் கட்டளையையும் சேர்த்து, தேவனுடைய அனைத்துக் கட்டளைகளையும் கைக்கொண்டு சிருஷ்டிகரைத் தொழுபவர்கள்; மற்றொன்று, மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் தொழுபவர்கள். ஓய்வுநாளைக் கைக்கொண்டு அதன்மூலம் சிருஷ்டிகரைத் தொழுதுகொள்வதற்கு ஒரு மாற்றுவழியை இந்தப் பொய்த்தொழுகைமுறை வழங்குகிறது.

தொழுகைக்கும் மெய்ப்பற்றுக்கும் இடையேயுள்ள தொடர்பு என்ன? தேவன்மேல் நமக்கு மெய்ப்பற்று இருந்தால், நம் தொழுகையில் என்னென்ன அம்சங்கள் காணப்படவேண்டும்?

செவ்வாய், ஜூன் 12

## தேவனுடைய முத்திரை

ஓர் ஆவணத்தில் கையெழுத்துக்கு இருக்கிற மதிப்பு முத்திரைக்கும் உண்டு. முற்காலங்களில், ஓர் அச்சை மென்மையான மெழுகு அல்லது களிமண்ணில் அழுத்தி, முத்திரையிடுவார்கள்; முத்திரையிட்டவர்தான் உரிமையாளர் என்பதை அது சுட்டிக்காட்டியது.

**தேவனுடைய முத்திரை என்ன? எப்போது அது கொடுக்கப்படுகிறது? எபே 1:13,14; 4:30; 2தீமோ 2:19; வெளி 7:1-4; 14:1.**

தேவனே உரிமையாளர், பாதுகாக்கிறவர் என்பதின் அடையாளம்தான் தேவனுடைய முத்திரை. நாம் மனம்மாறி, ஆவியானவரின் ஈவைப் பெறும்போது முத்திரிக்கப்படுகிறோமென்று பவுல் கூறுகிறார். அனைத்து விசுவாசிகளுக்கும் கொடுக்கப்படும் ஒரு 'முன்பணம்' என்று இதை அவர் அழைக்கிறார். அதாவது, இயேசு திரும்பவரும்போது நாம் பெற்றுக்கொள்ளும் சுதந்தரத்திற்கும் பூரணமீட்பிற்கும் இது அச்சாரமாக இருக்கிறதாம். இரண்டாம் வருகைக்கு சற்றுமுன் போடப்படுகிற ஒரு முத்திரைபற்றி வெளிப்படுத்தல் புத்தகம் விவரிக்கிறது. பின்மாரியின் சமயத்தில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படும்போது 144,000 பேர் இந்த முத்திரையைப் பெறுகிறார்கள். தேவனுடைய நாமம் அல்லது முத்திரை அவர்களுடைய நெற்றிகளில் எழுதப்பட்டிருக்கும். ஆவியானவர் அவர்களுடைய வாழ்க்கையில் கிரியைசெய்வதன்மூலம் அவர்கள் தேவனுடைய குணத்தைப் பிரதிபலிக்கிறவர்களாக மாறுகிறார்கள்.

**தேவனுடைய முத்திரையை மிருகத்தின் முத்திரையோடு ஒப்பிடுங்கள். இரண்டுக்குமுள்ள வித்தியாசங்களைக் குறிப்பிடுங்கள். வெளி 7:3; 14:9.**

தேவனைத்தொழுகிற உண்மை பிள்ளைகள் முத்திரையிடப்படுவதாகவும், மிருகத்தைத் தொழுகிறவர்களுக்கு அடையாளம் கொடுக்கப்படுவதாகவும் ஆங்கில வேதாகமத்தில் உள்ளது. முத்திரை நெற்றியில் போடப்பட்டது; தேவன் கட்டளையிட்டுள்ளபடி அவரைத் தொழுகொள்ள அவர்கள் மனதில் தீர்மானித்ததை அது சுட்டிக்காட்டுகிறது. ஆனால் அடையாளமானது, நெற்றியிலோ கையிலோ போடப்படுகிறது. இதன் அர்த்தம் என்னவென்றால், இரண்டில் ஒரு காரணத்திற்காக மிருகத்தை மக்கள் வணங்குகிறார்கள். ஒன்று, மிருக வல்லமைகள்தான் மெய்யான கடவுள் என்று மனதில் தீர்மானித்து வணங்குகிறார்கள்; அல்லது, தங்களுக்கு அதில் சம்மதம் இல்லையானாலும் வேறு வழியின்றி தொழுகிறார்கள்; ஒத்துப்போகாவிட்டால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடுமென்கிற பயம்தான் காரணம். அதாவது வாங்கவோ விற்கவோ கூடாமல் போய், கடைசியில் கொல்லப்படவும் வாய்ப்புள்ளது. வெளி 13:17,15.

'உலகத்தோடு இசைந்துபோகிறவர்கள், உலகத்திற்கு ஒத்த வேஷத்தைத் தரித்து, மிருகத்தின் முத்திரையைப் பெற ஆயத்தமாகிறார்கள். தங்களுடைய சுயத்தின்மேல் நம்பிக்கைவைக்காமல், தேவனுக்குமுன் தங்களைத் தாழ்த்தி, சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, தங்கள் ஆத்துமாக்களைச் சுத்திகரிப்பவர்கள் பரலோகக் குணத்தைப்பெற்று, தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைப் பெற ஆயத்தமாகிறார்கள்.' - *EGW, 5T, p216.*

## மிருகத்தின் முத்திரை

நாம் பெறக்கூடாத இந்த முத்திரை என்ன? தானி 7 சொல்கிற நான்காம் மிருக வல்லமையானது, தன் ஆளுகையின் பிற்பகுதியில் ‘ காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்’ என்று ஏற்கனவே பார்த்தோம். தானி 7:25. இந்த வல்லமைதான் சமுத்திரத்திலிருந்து எழுந்த மிருகம் என்று வெளி 13 சொல்கிறது. இந்த வல்லமை மாற்ற நினைத்த பிரமாணம் நான்காம் கற்பனை யாகிய ஓய்வுநாளாகும். பத்துக் கற்பனைகளில் ஓய்வுநாள்தான் தேவனைப் பற்றி, அவர் ‘வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்’ என்று நேரடி யாகச் சுட்டிக்காட்டுகிறது. யாத் 20:11.

இந்த மிருக வல்லமை மாற்ற நினைத்த இதே கற்பனையைத்தான் முதலாம் தூதனுடைய தூது சுட்டிக்காட்டுகிறது; தேவனைமட்டுமே சிருஷ்டிகராகத் தொழும்படி அந்தத் தூதன் கூறுகிறான். ‘மிருகத்தையும் அதன் சொரூபத்தையும்’ வணங்குகிறவர்களின் நிலை என்னவாகுமென மூன்றாம் தூதன் எச்சரிக்கிறான்; வெளி 14:9. பிறகு, தேவனுக்கு உண்மையாக நடப்போரைப்பற்றிக் கூறுகிறான். வெளி 14:12.

**தேவனுக்கு உண்மையாக நடப்பவர்கள்பற்றி வெளி 14:12 சொல்கிற விபரத்தை வைத்து, கடைசிக்கால நிகழ்வுகளில் ஓய்வுநாள் முக்கியப் பங்கு வகிக்குமென்று எவ்வாறு புரிந்துகொள்ள முடிகிறது?**

‘தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தை யும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்’ என்று வெளி 14:12 கூறுகிறது. ‘தேவனுடைய கற்பனை களில்’ நான்காம் கற்பனையும் ஒன்று. ஓய்வுநாள்பற்றிய அக்கற்பனைதான் தேவனே சிருஷ்டிகர், அவரை மட்டுமே வணங்கவேண்டும் என்கிறது. எனவேதான், ‘மிருகத்தின் முத்திரையானது’ நேரடியாக ஞாயிறு ஆசரிப்புடன் தொடர்புள்ளதாகக் கருதப்படுகிறது. ஞாயிறு ஆசரிப்பானது வேதாகமத்தில் சொல்லப்படாத ஒரு ‘போலி ஓய்வுநாள்’ ஆசரிப்பாகும். ஆனால், நான்காம் கற்பனையைக் கைக்கொள்ளும்படி வேதாகமம்தானே கட்டளையிட்டுள்ளது.

அப்படியானால் இன்று ஞாயிற்றுக்கிழமைகளில் ஆசரிப்பவர்கள் மிருகத் தின் முத்திரையைப் பெற்றவர்கள் என்று அர்த்தமா? இல்லை. மிருகத்தின் இந்தப் பொய்த்தொழுகையில் ஈடுபட மறுப்பவர்கள் கொலை செய்யப்படுவார் களென வெளி 13:15 கூறுகிறது. இறுதியில், இது வாழ்வா, சாவா என்கிற ஒரு பிரச்சனையாக உருவாகப் போகிறது. ஆனால், இந்த நிகழ்வுகளுக்கான காலக் கட்டம் இன்னும் வரவில்லை: இந்த இறுதிச் சோதனை வேளையில்தான் மிருகத் தின் முத்திரையைப் பெறப்போகிறவர்கள் யாரெனத் தெரியும். எனவே, இது வரையிலும் யாரும் மிருகத்தின் முத்திரையைப் பெறவில்லை.

தேவனுடைய கற்பனைகள், இயேசுவின் மேலுள்ள விசுவாசம் இரண்டும் இப்போதும்கூட ஒரு மெய்யான கிறிஸ்தவரிடம் காணப்படவேண்டிய மிகமுக்கியத் தன்மைகளாக எவ்வாறு விளங்கு கின்றன?

**வியாழன், ஜூன் 14**

## ஓய்வுநாள் என்கிற முத்திரை

தேவனுக்கு உண்மையாக நடப்பவர்களின் ஓர் அடையாளமாக ஓய்வுநாள் விளங்கிவந்துள்ளதை வரலாறு முழுவதிலும் காணலாம். ஆதாம்-ஏவாள் முதல், இஸ்ரவேலரின் காலம்வரை காணலாம். புதிய ஏற்பாட்டுச் சபையிலும் ஓய்வுநாள் கடைபிடிக்கப்பட்டது. இயேசு ஓய்வுநாளை ஆசரித்தார்; அப்போஸ தலர்களும் ஆசரித்தார்கள்; கடைசிக்காலத்தில் 'தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்கிறவர்கள்,இயேசுவின்மேலுள்ளவிசுவாசத்தைக்காத்துக்கொள்கிற வர்கள்' என்று தேவபிள்ளைகளை வேறுபடுத்திக் காட்டும் அடையாளமாக ஓய்வுநாள் விளங்கப்போகிறது.

**ஓய்வுநாள் எவ்வாறு மிகமுக்கியமான ஒரு நாளாக இருக்கிறது? கிறிஸ்தவர் களுக்கு இது ஏன் தனிச்சிறப்புக்குரிய ஒரு நாள்? யாத் 20:8–11; எபி 4:9,10.**

---

பத்துக்கற்பனைகளின் மையப்பகுதியில் ஓய்வுநாள் கற்பனை உள்ளது. சிருஷ்டிகர் தம்முடைய அதிகாரத்தின் முத்திரையாக, அடையாளமாக அதைக் கொடுத்தார். 'உன் தேவனாகிய கர்த்தர்' என்று அவருடைய பெயரைச் சொல்லி ஓய்வுநாள் வலியுறுத்தப்படுகிறது. 'வானம், பூமி, சமுத்திரம், அவைகளிலுள்ள எல்லாம்' என அவர் ஆளுகைக்கு உட்பட்டிருக்கிற பகுதிகளைச் சொல்லியும், 'கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்' என்று அவருடைய அதிகாரத்தை வலியுறுத்தியும் ஓய்வுநாள் அடையாளங் காட்டப்படுகிறது.

இயேசுவின் மூலமாக தேவன் சகலத்தையும் சிருஷ்டித்தாரென புதிய ஏற்பாடு கூறுகிறது. யோவான் 1:1-3; கொலோ 1:16; எபி 1:1,2. எனவே, ஆறு நாட்களில் நம் உலகத்தைச் சிருஷ்டித்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தது இயேசு தான். அதுபோல, வெள்ளிக்கிழமை மதிய வேளையில் சிலுவையில் தொங்கிய இயேசு, 'முடிந்தது' என்று சொன்னதும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். யோவான் 19:30. சிருஷ்டிப்பின் கிரியையை முடித்து, ஓய்வுநாளில் அவர் ஓய்ந்திருந்ததுபோல, இயேசு நம்மை மீட்கும்படி நமக்காக மரித்து, தம் பாவ நிவாரணகிரியையை முடித்தபிறகும் ஓய்வுநாளில் கல்லறையில் ஓய்ந்திருந்தார். முதலில் சிருஷ்டிப்பு, பிறகு சிலுவை என ஓய்வுநாள் இரண்டு விதத்தில் ஆசீர் வதிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் ஓய்வுநாளில் ஓய்ந்திருக்கும் கிறிஸ்தவர், ' தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியை களை முடித்து ஓய்ந்திருப்பான்' என்று எபிரெயர் 4:10 கூறுகிறது. 'நம்மை நாமே இரட்சிக்கமுடியாது; ஆரம்பம்முதல் முடிவுமட்டும் கிறிஸ்துவின் கிரியையே விசுவாசத்தின்மூலம் அதைச் சாத்தியமாக்குகிறது' என்பதற்கு மிகச்சரியான ஒரு சின்னமாக ஓய்வுநாள் இருக்கிறது. ஒப்பிடவும்: எபி 12:2.

நம் கிரியைகளிலிருந்து நாம் ஓய்ந்திருப்பதை ஓய்வுநாள் சுட்டிக்காட்டுகிறது என்றால், ஞாயிறு ஆசரிப்பு எதைச் சுட்டிக்காட்டுகிறது? பாபிலோனின் அடிப்படைக் குணம் இதில் எவ்வாறு வெளிப்படுகிறது?

## மேலும் படிக்க:

“‘தேவபிள்ளைகளின் நெற்றிகளில் முத்திரைபோடப்பட்டு, அசைக்கப் படுதலுக்கு ஆயத்தமாக்கப்பட்டதும் தீர்ப்பு வரும். முத்திரை என்பது காணக்கூடிய முத்திரையோ, அடையாளமோ அல்ல; மாறாக அவர்கள் தடுமாறாதபடி ஆவிக் குரியரீதியாகவும் அறிவுரீதியாகவும் அவர்களை சத்தியத்தில் ஸ்திரப்படுத்தும் செயலாகும். ஆனால் தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் ஏற்கனவே தொடங்கி யாயிற்று; இனி வரப்போவதை நாம் அறியும்படி தேசத்தில் தீர்ப்புகள் உண்டாகி வருகின்றன.’’ - *EGW, The Faith I live By, p 285.*

மெய்ப்பற்றுக்கான மிகப்பெரும் சோதனையாக ஓய்வுநாள் இருக்கும், ஏனென்றால், கற்பனைகளில் இதுமட்டுமே மறுக்கப்பட்டுள்ளது. மனிதருக்கு நேரிடும் இறுதிச் சோதனையின் போது, ‘தேவனைச் சேவிப்பவர்கள் யார்? அவரைச் சேவிக்காதவர்கள் யார்?’ என்பது வேறுபடுத்திக் காட்டப்படும். அரசாங்க சட்டத் திற்கு இணங்கி, பொய்யான ஓய்வுநாளை ஆசரிப்பது நான்காம் கற்பனைக்கு முரணாகவும், தேவனுக்கு எதிரான ஒரு வல்லமைமேலுள்ள பற்றை நிரூபிப்பதாகவும் இருக்கும்; அதுபோல, தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, மெய்யான ஓய்வுநாளைக் கைக்கொள்வது சிருஷ்டிகர்மேல் பற்று வைத்திருப்பதற்கான ஆதார மாக இருக்கும். ஒரு சாரார், உலக வல்லமைகளுக்குக் கீழ்ப்படிவதைக் குறிக்கிற அடையாளத்தை ஏற்றுக்கொண்டு, மிருகத்தின் முத்திரையைப் பெறுவதுபோல, இன்னொரு சாரார் தெய்வீக அதிகாரத்தின்மேல் பற்றுவைத்து, அதற்கான தேவனுடைய முத்திரையைப் பெறுவார்கள்.’ - *EGW, GC, p 605.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *தேவையற்ற சர்ச்சையை உண்டாக்காமல், மிருகத்தின் முத்திரைபற்றியும், தேவ னுடைய முத்திரைபற்றியும் எவ்விதங்களில் எல்லாம் மற்றவர்களுக்குத் தெரியப் படுத்தலாம்? உதாரணமாக, மிருகத்தின் முத்திரை இப்போது யாரிடமும் இல்லை என்பதை வலியுறுத்துவது ஏன் முக்கியமானது?*
2. *ஓய்வுநாளும், பரிசுத்த ஆவியானவரால் முத்திரிக்கப்படுவதும் எவ்வாறு சம்பந்தப் படுகிறது?*
3. *‘ஆவிக்குரிய ரீதியாகவும், அறிவு ரீதியாகவும் சத்தியத்தில் ஸ்திரப்படுதல்’ என்று எலன் ஒய்ட் கூறுகிறார். அதன் அர்த்தம் என்ன?*
4. *பாபிலோனின் தன்மைகள், அதன் நெறிமுறைகள், அணுகுமுறைகள்பற்றி விவாதி யுங்கள். தேவனுடைய ராஜ்யத்தின் நெறிமுறைகளிலிருந்து அவை எவ்வாறு வேறு படுகின்றன? பாபிலோனின் நெறிமுறைகள் சில எவ்வாறு நம்முடைய சபைக் குள் இரகசியமாக இப்போது நுழைந்துகொண்டிருக்கின்றன? அவற்றை அடை யாளங் காணவும், தேவனுடைய ராஜ்யத்தின் நெறிமுறைகளைப் பிரதிபலிக்கிற கிறிஸ்தவ தன்மையோடு அவற்றை அணுகவும் நாம் என்ன செய்யலாம்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: **போதகர் சாத்ராக் சாமுவேல்,**

**டாக்டர் ஏ. ஜான்சன்**

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

   என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள்.

   அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

   என்று டைப் பண்ணினால்,

   ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*